# DEPOSITION OF WITNESS

***IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, TIRUNELVELI.***

**O.S. No. 197/ 2022**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.3 | – | ஜெகநாதன் |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tmt.P.Maheswari in accordance with the Provisions of Act X of 1873 on **the 27th day of April 2026.**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் 5ம் பிரதிவாதி ஆவேன். என் தரப்பில் நிரூபண பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண பத்திரத்தில் கூறியுள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 22.03.2021 தேதியிட்ட நூர்ஜஹான் என்பவர் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் SRO நகல் பி.வா.சா.ஆ16 (இதே ஆவணம் வாதி தரப்பில் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). 14.08.2023 தேதியிட்ட 3ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் SRO நகல் பி.வா.சா.ஆ17 (இதே ஆவணம் வாதி தரப்பில் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). 21.08.2023 தேதியிட்ட குமார் என்பவருக்கு வாடகைக்கு கொடுத்ததற்கான வாடகை ஒப்பந்த

பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.18. 21.08.2023 தேதியிட்ட பாஷித் என்பவருக்கு வாடகைக்கு கொடுத்ததற்கான வாடகை ஒப்பந்த பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.19 (பி.வா.சா.ஆ.18, 19 ஆகிய ஆவணங்கள் stamp duty penality வசூல் செய்து குறியீடு செய்யப்படுகிறது.). 5ம் பிரதிவாதி பெயரில் உள்ள தாவா சொத்தில் உள்ள கடை கட்டிடங்களுக்கான தீர்வை ரசீதுகள் 14 எண்ணம் பி.வா.சா.ஆ.20 வரிசை (மேற்படி ஆவணம் வழக்கிற்கு பிந்திய ஆவணம் என்று வாதி தரப்பின் ஆட்சேபணை பதிவு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.). பிராதை தள்ளுபடி செய்ய வேண்டும்.

(பி.வா.சா.1 – 4 மற்றும் பி.வா.சா.7 தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.)

(வேண்டுகோளின் பேரில் வாதிதரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Uploaded on 27.04.2026